## ஆவணக்காப்பகம் மற்றும் அருங்காட்சியகத் திட்டம் தொடர்பான திட்டமுன்வரைவுகளுக்கான வேண்டுகோள்: ஐ.எஃப்.ஏ. பெங்களூரு, தி சினிமா ரிசோர்ஸ் சென்டர் – சென்னை உடன் இணைந்து வழங்கும் செயல்திட்டங்கள்

## கடைசி நாள்: ஞாயிற்றுக்கிழமை, நவம்பர், 26, 2023

பெங்களூரிலுள்ள ஐ.எஃப்.ஏ. (இந்தியா ஃபௌண்டேசன் ஃபார் தி ஆர்ட்ஸ்), தி சினிமா ரிசோர்ஸ் சென்டர், சென்னை (The Cinema Resource Centre – TCRC), உடன் இணைந்து ஐ.எஃப்.ஏ. – டி.சி.ஆர்.சி. ஆய்வுத்திட்டம் (scholarly project), ஐ.எஃப்.ஏ. – டி.சி.ஆர்.சி. படைப்புத்திட்டம் (creative project) என்ற இரு செயல்திட்டங்களுக்கான விண்ணப்பங்களை வரவேற்கின்றது. இவை இரண்டும் ஐ.எஃப்.ஏ.வின் ஆவணக்காப்பகம் மற்றும் அருங்காட்சியகத் திட்டத்தின்கீழ் வருகின்றன. இத்திட்டம் இரண்டுவிதமான நோக்கங்களைக் கொண்டது; முதலாவதாக, ஆவணக்காப்பகங்களிலும், அருங்காட்சியகங்களிலும் உள்ள சேகரிப்புகளின் மீதான பொது (மக்கள்) ஈடுபாட்டிற்காகப் புதிய, விமர்சனமிக்க, படைப்புத்திறன் சார்ந்த அணுகுமுறைகளை உருவாக்குவதற்கான வாய்ப்பினைக் கலைச்செயல்பாட்டாளர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் வழங்குதல்; இரண்டாவதாக, இவற்றின் ஊடாக உருவாகும் வெளிகளை உரையாடல் மற்றும் சொல்லாடல்களுக்கான தளங்களாக ஆற்றல்படுத்துதல். இத்திட்டம் தொடர்பான முந்தைய செயல்திட்டங்களை அறிய, இங்கே சொடுக்கவும்.

விண்ணப்பிக்கக் கடைசி நாள்: **ஞாயிற்றுக்கிழமை, நவம்பர், 26, 2023**
விண்ணப்பங்களுக்கான அழைப்பினைத் தமிழில்/ஆங்கிலத்தில் படிக்க, இங்கே சொடுக்கவும்.

**தி சினிமா ரிசோர்ஸ் சென்டர், சென்னை,** குறித்து:
தமிழ்நாட்டின் சென்னையிலுள்ள டி.சி.ஆர்.சி. இந்திய சினிமாவிற்கான இலாப – நோக்கமற்ற பொது ஆவணக்காப்பகம். இந்தியத்திரைப்படங்கள், குறிப்பாகத் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழித்திரைப்படங்களால் உருவாக்கப்பட்ட காண்பியப் பண்பாட்டுக் கலைப்பொருட்கள் (artefacts), ஒலி - ஒளி பண்பாட்டுக் கலைப்பொருட்கள் தொடர்பான ஆராய்ச்சி மேற்கொள்வதன் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

டி.சி,ஆர்,சி.யில் உள்ள சேகரிப்புகள் கடந்த 80 வருடங்களில் தென்னிந்திய மொழிகளில் வெளிவந்த பல்வேறு திரைப்படங்களை மையமாகக் கொண்டவை. இவை திரைப்படச் சேகரிப்பாளர்கள், தயாரிப்பாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், கலைஞர்கள், ரசிகர்கள் போன்றோரிடமிருந்து சேகரிக்கப்பட்டவை. இச்சேகரிப்புகள் திரைப்படச் சுவரொட்டிகள், லாபி கார்டுகள் (lobby cards), பாட்டுப்புத்தகங்கள், நீண்ட நேரம் பாடக்கூடிய ஒலிப்பேழைகள் (long-playing records), சினிமா குறித்த இலக்கிய, மதிப்புரைக் கட்டுரைகள், திரைப்பட ஸ்டில்கள் (stills) போன்ற வகைகளைக் கொண்டவை.

***ஐ.எஃப்.ஏ. – டி.சி.ஆர்.சி. செயல்திட்டங்கள்*** *குறித்து:*

இந்தக் கூட்டுச்செயல்பாட்டிற்காக, டி.சி.ஆர்.சி.யிலுள்ள இருவித சேகரிப்புகள் குறித்த இருவித செயல்பாடுகளுக்கான விண்ணப்பங்களை வரவேற்கிறோம்.

- ***1950 முதல் 1990 வரையிலான தமிழ் சினிமாவில் லாபி கார்டுகள் தொடர்பான ஆய்வுத் திட்டங்கள்:*** லாபி கார்டுகள், தம் பெயருக்கேற்றார்போல, திரையரங்குகளின் லாபிகளில் பயன்படுத்தப்பட்டன. ஒரு படத்தை விளம்பரப்படுத்தும் நோக்கில் அப்படத்தின் தயாரிப்பு நிறுவனத்தால் விநியோகிக்கப்படும் இவை திரையரங்குகளில் வைக்கப்பட்டன. காலப்போக்கில், சினிமா நினைவுச்சின்னங்களில் அதிகளவில் விரும்பப்படுபவையாக இவை உருவெடுத்தன. 1950கள் முதல் 1990கள் வரையிலான காலப்பகுதியில் வெளிவந்த தமிழ்த்திரைப்படங்களின் லாபி கார்டுகள் இச்சேகரிப்பில் உள்ளன. **ஆய்வுச் செயல்திட்ட**த்தில் பின்வரும் கருக்களில் திட்டமுன்வரைவுகளை (proposals) வரவேற்கிறோம்.
    - சேகரிப்பை விமர்சனமுறையில் அணுகி ஆராய்ச்சியை அடிப்படையாகக்கொண்ட பொருட்களை உருவாக்குதல்
    - குறுநூல்கள், கட்டுரைகள், நீண்ட வடிவக் கட்டுரைகள், விவரணப்பட்டி போன்ற வகைகளின் மூலமாக இந்நிறுவனத்தின் அறிவு வங்கியை மேம்படுத்துதல்
    - தங்களின் ஆராய்ச்சியை, நேரடியாகவும் இணையம் வழியாகவும், பொதுநிகழ்வுகளினூடாக அளிக்கை செய்தல்

- ***1930கள் முதல் 1990கள் வரை இதழ்களில் வெளிவந்த தமிழ்சினிமா குறித்த விமர்சனங்கள் மீதான படைப்புச் செயல்திட்டங்கள்:*** இச்சேகரிப்பு 1930கள் முதல் 1990கள் வரை வெவ்வேறு இதழ்களில் வெளிவந்த தமிழ்த்திரைப்படங்கள் குறித்த விமர்சனங்களை உள்ளடக்கியது. இவ்வெளியீடுகளில் சில வருடப்பதிப்புகளாகவும் சில மாதமிருமுறை அல்லது வாராந்திர பதிப்புகளாகவும் வெளிவந்துள்ளன. இவற்றில் வெளிவந்த விமர்சனங்களில் சில அக்காலகட்டத்தில் புகழ்பெற்ற எழுத்தாளர்களால் எழுதப்பட்டுள்ளன. சினிமா குறித்த எழுத்து சார்ந்த கதையாடல்களை ஆராய்வதற்கும் ஊக்குவிப்பதற்கும் இன்றியமையாத ஆதாரங்களாக இவை அமைகின்றன. **படைப்புச் செயல்திட்டம்** தொடர்பாகப் பின்வரும் கருக்களில் திட்டமுன்வரைவுகளை வரவேற்கிறோம்.
    - இச்சேகரிப்பை மறுகற்பனை செய்யும் விதத்தில் புதுமையாகக் காட்சிப்படுத்தல், கலைரீதியிலான இடையீடு போன்றவற்றை அளிக்கைசெய்தல்
    - வெகுவாரியான மக்களைச் சென்றடையும் வகையில் நேரடி அல்லது மெய்நிகர் கண்காட்சிகள், திரைப்படங்கள், போட்காஸ்டுகள் (podcasts) போன்ற ஆக்கப்பூர்வமான விளைவுகளை உருவாக்குதல்

பல்துறைப்புலம் சார் அணுகுமுறைகள், முறையியல்கள் சார்ந்தும் கூட்டாகவும் மேற்கொள்ளப்படும் செயல்திட்டங்களை நாங்கள் ஊக்குவிக்கின்றோம்.

இருவகைச் செயல்திட்டங்களும் **ஒரு வருட கால** அளவைக் கொண்டவை.

செயல்திட்டங்களின் ஒருங்கிணைப்பாளர்கள் சென்னை டி.சி.ஆர்.சி.யில் உள்ள சேகரிப்புகளை நேரடியாகச் சென்று உரிய சேகரிப்புகளைப் பார்த்து தங்களின் ஆய்வை மேற்கொள்ள வேண்டும். அவர்களுக்குச் செயல்திட்டத்தின் காலம் முழுவதும் மேற்குறித்த சேகரிப்புப் பொருட்களைப் பார்க்கவும் ஆய்வு மேற்கொள்ளவும் அனுமதியுண்டு. ஆய்விற்காக உள்ள சேகரிப்பு, பொருட்கள் குறித்து முழுமையான விவரங்களை அறிய, தயைகூர்ந்து டி.சி.ஆர்.சி.யின் ஆவணக்காப்பாளர் **வி.வி.பிரசாத்**தை archives.tcrc@gmail.com என்ற முகவரியில் தொடர்புகொள்ளவும்.

**விண்ணப்பதாரர் விபரம்:**

- அருங்காட்சியகக் காப்பாளர்கள், கலைஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், எழுத்தாளர்கள், நிகழ்த்துநர்கள், படைப்புச் செயல்பாட்டாளர்கள் ஆகியோரிடமிருந்தும்,

ஆவணக்காப்பகம் மற்றும் அருங்காட்சியகத்தில் ஆய்வு மேற்கொள்வதில் தீவிர விருப்பமுடைய ஆய்வாளர்களிடமிருந்தும் நாங்கள் விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றோம்.

- மொழிசார்ந்த புலமை ஆய்வு மேற்கொள்ள உதவியாக இருக்குமென்பதால், தமிழில் புலமையுடைய விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகின்றனர்.
- இந்தியக் குடிமக்கள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். விண்ணப்பிப்பதற்கான தகுதி குறித்த மேலதிக விபரங்களுக்கு, இங்கே சொடுக்கவும்.

**விண்ணப்பிப்பதற்கான வழிகாட்டுதல்கள்:**

- மேற்குறித்த காண்பிய மற்றும் பனுவல் சார்ந்த ஆவணங்களிலிருந்து வளர்த்தெடுக்கப்படும் செயல்திட்ட த்தைச் சுருக்கமாக விளக்கக்கூடிய ஒரு **திட்ட முன்வரைவு** (இந்த அழைப்பில் குறிப்பிட்டபடி, ஒருவரால் கற்பனை செய்யக்கூடிய படைப்புசார்ந்த விளைவுகளை அல்லது ஆய்வுத்திட்டமாக இருப்பின், ஆய்வுக்கேள்விகளை விளக்குவதாக இம்முன்வரைவு அமையலாம்). இந்த விவரணை செயல்திட்ட த்திற்கான நோக்கம், அணுகுமுறை, சாத்தியப்படும் விளைவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.
- ஆவணங்களிலிருந்து வளர்த்தெடுக்கப்பட்டுச் செயல்படுத்தக்கூடிய அளவிலான பிற பொது நிகழ்வுகள் குறித்த **சுருக்கம்**
- விரிவான **வரவுசெலவுத்திட்டம்**
- ஒரு காப்பாட்சியராக, கலைச்செயற்பாட்டாளராக அல்லது ஆய்வாளராக நீங்கள் ஈடுபட்டுள்ள செயல்திட்டம் குறித்த சுருக்கமான விவரங்களுடன் கூடிய **தன் விபரக் குறிப்பு**. முந்தைய செயல்திட்டத்தின் நோக்கம், படிமுறைகள், விளைவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இந்த விவரணை அமைய வேண்டும். முந்தைய செயல்திட்டம் பற்றிய மேலதிக விபரங்களை இணைப்புகளாக அனுப்பாமல், அவை குறித்த தகவல்களைத் தரக்கூடிய இணையத்தள முகவரிகளைக் குறிப்பிட்டு ஒரு ஆவணத்தை அனுப்புங்கள்.

மேற்குறித்தவற்றை இணைப்புகளாக ஒரே மின்னஞ்சலில் எங்களுக்கு அனுப்பவும்.

- நீங்கள் வேலைத்திட்ட முன்வரைவுகளை ஆங்கிலம் உள்ளிட்ட எந்த இந்திய மொழியிலும் எழுதலாம். இந்திய மொழிகளில் நிகழ்ந்து வருகின்ற சொல்லாடல்களுக்குப்

பங்களிப்புச் செய்யும் நோக்கில், ஆங்கிலத்தைக் காட்டிலும், பிற இந்திய மொழிகளில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களை ஐ.எஃப்.ஏ. ஊக்கப்படுத்துகின்றது.

- உங்களின் விண்ணப்பத்தை அல்லது இத்திட்டம் தொடர்பான ஐயங்கள், கேள்விகள் இருப்பின் அவற்றை ரித்விகா மிஸ்ராவிற்கு ritwika@indiaifa.org என்ற மின்னஞ்சலுக்கு Application for IFA – TCRC என்ற தலைப்பிட்டு அனுப்பவும்.

**செயல்திட்டத்தின் வரவுசெலவு**

- செயல்திட்டத்தின் மொத்த வரவு செலவு **ரூ. 2,00,000/-** க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- செயல்திட்டக் கால முழுமைக்கும் நீங்கள் முன்வைக்கும் வரவுசெலவுத்தொகையில் ***35%-க்கு மிகாமல்*** மதிப்பீட்டுத் தொகை (honararium) கோரலாம். மொத்த வரவுசெலவுத் தொகையானது மதிப்பீட்டுத்தொகையை உள்ளடக்கியதே.
- செயல்திட்டம் தொடர்பான செலவினங்களையும் நடவடிக்கைகளையும் மட்டுமே திட்டத்தின் நிதி பொறுப்பெடுக்கும். உள்கட்டமைப்பு மற்றும் கருவிகள் சார்ந்த செலவினங்களுக்கு செயல்திட்டம் பொறுப்பெடுக்காது.

**முக்கிய நாட்கள்:**

- விண்ணப்பங்களைப் பெறுவதற்கான கடைசி நாள்; **ஞாயிற்றுக்கிழமை, நவம்பர் 26, 2023**
- தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு **2023, டிசம்பர்** மாதத்தில் நேர்காணல் நடைபெறும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட செயல்திட்டங்கள் **2024, ஜனவரி**யில் துவங்கி, ஒருவருட காலத்திற்கு நடைபெறும்.

ஐ.எஃப்.ஏ. இச்செயல்திட்டத்தை உங்களைத் திட்ட ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு செயல்படுத்தும்.

*குழந்தைகள் உட்பட அனைவரையும் ஆதரிக்கக்கூடிய, மதிக்கக்கூடிய, பாதுகாக்கக்கூடிய வகையிலான பாதுகாப்பான சூழலை உருவாக்குவதில் ஐ.எஃப்.ஏ. உறுதிபூண்டுள்ளது என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். விண்ணப்பதாரர்கள் இந்நோக்குடன் ஒத்துப்போக வேண்டும் என்பதோடு எப்போதும் அதனைக் கடைப்பிடிக்கவும் வேண்டும்.*

இவண்,

ஐ.எஃப்.ஏ. குழுவினர்.